1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. விசாரணை முடிந்த பின்னர்தான் யார் குற்றவாளி என்று அறிந்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும்.

Meter System for the Parking of Cars

* 108 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Madras Corporation has sought the permission of the State Government to introduce meter system for the parking of cars in some thoroughfares; and

(*b*) if so, the details thereof?

கார்களை நிறுத்துவதற்காக மீட்டர் முறை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒரு சில பொது வழிகளில் கார்களை நிறுத்துவதற்காக மீட்டர் முறையைக் கொண்டுவர சென்னை மாநகராட்சி, மாநில அரசின் அனுமதியைக் கோரியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு மோட்டார் வண்டி விதிகள் தக்கவாறு திருத்தப்பட்டு அரசால் ஏற்பளிக்கப்பட்ட பின்னரே முக்கிய சாலைகளில் கார்களை நிறுத்தி வைப்பதற்கு மீட்டர் முறையைக் கொண்டுவர அனுமதியளிக்க இயலும். இக்கருத்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, எந்தவிதமான முக்கியப் பகுதி களில் மீட்டர்கள் பொருத்தலாமென்று மாநகராட்சி அரசுக்கு யோசனை அனுப்பியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நெரிசல் மிகுந்தும் முக்கிய சாலைகளாகவும் உள்ள இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கே எல்லாம் மீட்டர் பொருத்தலாம் என்று மாநகராட்சி கருத்து தெரிவித்திருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, will the Government undertake to put these meters, because if it is entrusted to the Corporation, the meters themselves might disappear.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Mr. Chairman, Sir, the suggestion of the hon. Member will also be carefully looked into by the Government.

THIRU K. S. ABDUL WAHAB: Mr. Chairman, Sir, I want to know the explanation for the meter system.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கார்களை முக்கியமான இடங்களிலே அவர்கள் நிறுத்திவிட்டுப் போய்விடுவார்களே யானால், குறிப்பிட்ட அளவு காலதாமதமான பிறகு, தானாக இந்த மீட்டர் இவ்வளவு கட்டணத்தைக் கட்ட வேண்டும் என்று ஓடிக்கொண்டே இருக்கும். அதிக நேரம் கார்களை நிறுத்தி வைப்பார்களானால், அதிக ரூபாய் போட்டுக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நேரமானவுடனே மணி அடிக்கும். காரை எடுக்கவில்லை என்றால், போலீஸ்காரர் வந்து 10 ரூபாய் ஃபைன் போட்டு விடுவார். You need not go to the Court; there will be the Police to punish you.

Taxis

* 109 *Q*.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether taxis from this State are permitted to ply in other States in the South under a single point tax; and

(*b*) if so, the details thereof?

வாடகைக் கார்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநில வாடகைக் கார்கள் ஒருமுனை வரியின் கீழ் ஏனைய தென் மாநிலங்களில் விடுவதற்கு, அனுமதிக்கப்படுகின்றனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?